1995 மார்ச் 17]

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சினால் உருவாகிற பனியன் மற்றும் பவர்லூம் காடா துணிகளுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதால் அவற்றை ஏற்றுமதி செய்கிற வாய்ப்பு இருந்தும், இங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து, அவற்றை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை அதிகம் பெறுகிற வாய்ப்பு இருந்தும் கூட தொடர்ந்து மத்திய அரசு மூலப் பொருளான பஞ்சினை ஏற்றுமதி செய்கிறது. அவ்வப்போது குரல் கொடுக்கிற நேரத்தில் மட்டும் தற்போது இல்லை என்று அவர்கள் சொன்னாலும், நிரந்தமாக பருத்தி ஏற்றுமதியைத் தடை செய்யவும், மத்திய அதிகாரக் குவிப்பினுடைய ஆதரவோடு பஞ்சைப் பதுக்கி வைக்கிற வர்த்தக சூதாடிகளிடமிருந்து பதுக்கலை வெளியே கொண்டு வரவும், நிரந்தமாக இந்தத் தொழிலுக்கு ஒரு பாதுகாப்பை உருவாக்குகிற வகையிலும் ஆவன செய்யப்படுமா? நிரந்தரமாக, ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கக்கூடிய அளவுக்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதைக் கடுமையாக வற்புறுத்தி தொடர்ந்து போராடி, அவர்களுக்கு இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஏற்றுமதி செய்வதைத் தடை செய்வதோடு பதுக்கலையும், கடத்தலையும் தடுக்கவேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் வற்புறுத்தி இருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் இப்படி நடைபெறாவண்ணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசைக் கண்டிப்பாக வற்புறுத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

54—

பட்டுக்கோட்டை அமரர் திரு. கல்யாணசுந்தரத்துக்கு சிலை அமைத்தல்

39270*—திரு. கி. பாலசுப்பிரமணியன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*1995 மார்ச் 17*

(அ) பட்டுக்கோட்டை அமரர் திரு. கல்யாணசுந்தரத்துக்கு ஒரு நினைவுச் சிலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பட்டுக்கோட்டையில் கவிஞர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களுடைய நினைவகம் ஒன்று கட்டப்பட வேண்டும் என்று இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த நினைவகம் அங்கே கட்டப்பட்டதற்குப் பிறகு அங்கே அவருடைய மார்பளவுச் சிலை ஒன்று வைப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமரர் கல்யாணசுந்தரனார் அவர்கள் திரைப்பட உலகிலே பாடல்களை இயற்றி பிரபலம் அடைந்ததன் காரணமாக அவருக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு நினைவு மண்டபம் எழுப்ப உத்தரவிட்டதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜே.ஜே. அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக எந்த இடம் என்று ஆய்வு செய்து, புகைப்படத்தையும் நேரில் எடுத்து, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களே அதைப் பார்வையிட்டு வந்துள்ளார்கள். அதனை இந்த ஆண்டிலே அமைக்க முடியுமா? அவருடைய நினைவுநாள் ஏப்ரலில் வருகிறது. அதற்குள் அதை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் அவர்கள் திரைப்படத்திற்கு பாடல்களை எழுதியதால் மட்டும் சிறப்படையவில்லை. பல சிறந்த பாடல்களை அவர் எழுதியிருக்கிறார். அவற்றில் சில பாடல்கள் திரைப்படத்தில் வந்திருக்கின்றன. எனவே, தப்பாகவே பேசிக்கொண்டிருக்கக்கூடாது.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவரும் கோரிக்கை வைக்காமலேயே, சமுதாயக்

1995 மார்ச் 17]

கேட்டை தகர்ப்பதற்காக பாட்டுக்கோட்டை கட்டிய பட்டுக்கோட்டை மக்கள் கவிஞருக்கு நினைவு மண்டபம் கட்டவேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டார்கள். அவர்களுடைய உத்தரவுக்கிணங்க எந்த இடத்தில் கட்ட வேண்டும் என்பது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு இடத்தை ஆய்வு செய்ததில் அந்த இடம் ஊரக வளர்ச்சித் துறைக்குச் சொந்தமானதாக இருந்ததால், பொதுப்பணித் துறைக்கு நில மாற்றம் செய்வதற்காக நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது தற்சமயம் வருவாய்த் துறையின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே நிலமாற்றம் செய்யப்பட்டதற்குப் பிறகு பொதுப்பணித் துறையின் மதிப்பீடுகள் பெறப்படும். மதிப்பீடுகள் பெறப்பட்டதற்குப் பிறகு நினைவகம் கட்டப்படும். நினைவகம் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகு சிலை வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை ஆய்வு செய்து, அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்து, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிக்க நன்றி. இருந்தபோதிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 ¼லட்சம் ரூபாயை மணி மண்டபம் கட்டுவதற்காக தந்து விட்டார்கள். அந்த நிலையிலே எந்தவித தடங்கலும் இல்லாமல் அந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டு முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதேபோன்று, சென்னையிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் திரு. என்.எஸ்.கே. அவர்களுக்கு சிலை அமைத்தார்கள். அதேமாதிரி விஸ்வகர்மா சமுதாயத்தைச் சேர்ந்த திரு. எம்.கே. தியாகராஜ பாகவதருக்கு திருச்சியிலும், கள்ளர் வகையைச் சேர்ந்த திரு. பி.யு. சின்னப்பா அவர்களுக்கு புதுக்கோட்டையிலும் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டு சிலைகள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி பட்டுக்கோட்டையைப் பற்றியது. உறுப்பினர் புதுக்கோட்டையைப் பற்றி கேட்கிறார். எனவே தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 55, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.